அந்நியச் செலாவணி பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நாடுகளுடன் ரூபாயில் வர்த்தகம்

நிர்மலா சீதாராமன்

புது தில்லி, அக். 16: 'அந்நியச் செலாவணி பற்றாக்குறையை எதிர்கொள்ளும் நட்பு நாடுகள் அத்தியாவசியப் பொருள்களைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதற்கு உதவும் வகையில், ரூபாய் மூலம் வர்த்தகத் தீர்வு காண்பதை இந்தியா ஊக்குவிக்க விரும்புகிறது' என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தாய்லாந்தின் பாங்காக் நகரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சர்வதேச நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்ற நிர்மலா சீதாராமன், பின்னர் நடைபெற்ற அட்லாண்டிக் கவுன்சில் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இதுகுறித்து மேலும் பேசியதாவது:

போர்கள் உள்பட அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்களால் பல நாடுகள் கடன்கள் மற்றும் அதை திரும்பச் செலுத்த முடியாத நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இதனால், அந்நியச் செலாவணியைப் பெறுவதில் சிரமப்படும் நாடுகள், பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருந்தபோதிலும், வர்த்தகத்தைத் தொடர்வதில் பெரும்பாலும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. இந்தப் பிரச்னைக்கு உள்நாட்டு நாணயத்தில் வர்த்தகம் செய்வதன் மூலம் தீர்வு காண முடியும்.

அந்த வகையில், இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகள் செலுத்த வேண்டிய பணம் எதுவாக இருந்தாலும், அதை ரூபாயில் மற்றும் உள்ளூர் நாணயத்தில் தீர்வுகள் மேற்கொள்வதை இந்தியா விரும்புகிறது. ரூபாயில் வர்த்தகத் தீர்வுகள் மேற்கொள்வதை எளிதாக்க இந்தியா நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்றார்.

பன்முகத்தன்மை குறித்து குறிப்பிட்ட அவர், இந்தியா பல வர்த்தக ஒப்பந்தங்களில் முன்னேற்றம் கண்டு வருகிறது. இருந்தபோதும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியான்' உடனான வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவுக்கு சாதகமற்ற வகையில் உள்ளது.

இந்த ஒப்பந்தத்தால் ஆசியான் நாடுகள் பயனடைவதை இந்தியா எதிர்க்கவில்லை. ஆனால், இது இந்தியாவுக்கு மிகவும் பாதகமான சூழலை உருவாக்குகிறது. இறக்குமதியாளர்களாக, எங்கள் சந்தைகள் மற்றும் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதில் நாங்கள் கவனம் செலுத்த விரும்புகிறோம்.

எனவே, இந்தியா இந்த ஒப்பந்தத்தை தொடர விரும்பினாலும், நிபந்தனைகள் சற்று மாற்றியமைக்கப்பட வேண்டும். அதுபோல, ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 16 நாடுகளை உறுப்பினராகக் கொண்ட 'பிராந்திய விரிவான பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தத்தில், பயனளிக்கக் கூடிய வகையில் எந்தவித அம்சமும் இல்லை என்ற அடிப்படையில் இந்தியா தொடர்ந்து விலகியுள்ளது.

அந்த உறுப்பு நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தாலும், ஒப்பந்தத்தில் இணைவது இந்தியாவுக்குச் சாதகமாக இருக்காது.

குறிப்பாக, சீனாவிலிருந்து மலிவான பொருள்கள் இறக்குமதி செய்யப்படுவது, வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பது, உள்நாட்டுத் தொழில் துறைகளுக்கும், விவசாயத்துக்கு போதிய பாதுகாப்பு இல்லாதது போன்ற காரணங்களால், இந்த ஒப்பந்தத்திலிருந்து கடந்த 2019-இல் இந்தியா விலகியது என்றார்.

விரைவில் இந்தியா-அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம்: 'உலக வர்த்தகத்தின் நலன் கருதியும், இரு நாடுகள் இடையிலான இருதரப்பு பொருளாதார உறவுகளைக் கருத்தில்கொண்டும், இந்திய-அமெரிக்க இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் விரைவில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்று நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'அமெரிக்கா உடனான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கையொப்பமாக வாய்ப்புள்ளது என்று மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயலும் அண்மையில் தெரிவித்திருந்தார். இருதரப்பு பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே, ஒப்பந்தம் விரைவில் இறுதியாகும் என எதிர்பார்க்கிறோம்.

அதுபோல, சீனாவுடன் பல ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டபோதிலும், அதிகரித்துவரும் வர்த்தக ஏற்றத்தாழ்வும், இந்திய பொருள்களுக்கான சந்தை அணுகலில் தொடரும் கட்டுப்பாடுகளும் பெரும் கவலைகளாக நீடிக்கின்றன.

மூலக்கூறு (ஜெனரிக்) மருந்துகள், மாட்டு இறைச்சி, காய்கறிகள் உள்ளிட்ட விரைவில் கெட்டுப் போகும் பொருள்கள் போன்றவற்றுக்காக இந்தியா தொடர்ந்து சீனாவில் சந்தை அணுகலை நாடி வருகிறது. ஆனால், பல ஆண்டுகளாகப் பேச்சுவார்த்தைகள் நடந்தபோதிலும் சிறிதளவே முன்னேற்றம் கண்டுள்ளது.

குறிப்பாக, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகத்தில் வரியல்லாத கட்டுப்பாடுகளே மிகப்பெரிய தடைகளாக உள்ளன என்றார்.

உத்தரகண்ட் பெண் அமைச்சர் மீது கணவர் ரூ.210 கோடி ஊழல் புகார்

டேராடூன், அக். 16: உத்தரகண்ட் பெண் அமைச்சர் ரேகா ஆர்யா ஊழல் செய்து ரூ.210 கோடி மதிப்பிலான சொத்துகளைக் குவித்துள்ளதாக அவரது கணவர் குற்றம்சாட்டியுள்ளார்.

உத்தரகண்ட் மாநில பாஜக அரசில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சராக பதவி வகிப்பவர் ரேகா ஆர்யா **(படம்)**. இவர் தன்னை கணவர் கிரிதாரி லால் சாஹு உடல்ரீதியாகத் துன்புறுத்துவதாகவும் மிரட்டல் விடுப்பதாகவும் கடந்த வியாழக்கிழமை விடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். மேலும், தன்னை கணவர் ஜாதி ரீதியில் இழிவாகப் பேசுவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். இது தொடர்பாக அவர் டேராடூனில் உள்ள கன்டோன்மென்ட் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் கணவர் கிரிதாரி லால் சாஹு மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், அமைச்சர் ரேகா ஆர்யா மீது அவரது கணவர் கிரிதாரி லால் சாஹு வெள்ளிக்கிழமை ஊழல் குற்றச்சாட்டை சுமத்தினார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட விடியோவில் கூறியிருப்பதாவது:

என் மனைவி ஊழல் செய்து ரூ.210 கோடி மதிப்பிலான சொத்துகளைக் குவித்துள்ளார். இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக முதல்வர் புஷ்கர் சிங் தாமி விரிவான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கிரிதாரி லால் சாஹு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உத்தரகண்ட் மாநில காங்கிரஸ் தலைவர் கணேஷ் கொடியால் கூறியதாவது:

உத்தரகண்டின் மகள் என்ற முறையில் அவரது துன்பம் நம் அனைவரிடமும் எதிரொலிக்கிறது. இதை ஒரு அரசியல் பிரச்னையாக்க நான் விரும்பவில்லை. எனினும், தான் துன்புறுத்தலை எதிர்கொண்டதாக அமைச்சர் ரேகா ஆர்யா தெரிவித்துள்ள இந்தப் பிரச்னையில் அவருக்கு பக்கபலமாக காங்கிரஸ் நிற்கும் என்றார் அவர்.

அமெரிக்காவில் இந்தியர்கள் மீது வெறுப்புணர்வு அதிகரிப்பு

எம்.பி.க்கள் கவலை

வாஷிங்டன், அக். 16: அமெரிக்காவில் இந்தியர்கள் மீது வெறுப்புணர்வு அதிகரித்துள்ளதாக அந்நாட்டு எம்.பி.க்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இல்லினாய்ஸ் மாகாணத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர பெருமாள் கோயிலில் பக்தர்கள் மீது 19 வயது அமெரிக்க இளைஞர் கடந்த 11-ஆம் தேதி துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கடைசி நேரத்தில் அந்த இளைஞரின் துப்பாக்கி செயல்படாமல்போனதால் பெரும் அசம்பாவிதம் ஏதும் நிகழவில்லை.

இது தொடர்பாக அமெரிக்க எம்.பி.க்கள் பலர் பெரும் அதிர்ச்சியும், கவலையும் தெரிவித்தனர். குடியரசுக் கட்சி செனட் உறுப்பினர் சக் ஷுமர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், 'இந்தியர்கள், ஹிந்துகளுக்கு எதிரான வெறுப்புணர்வு அமெரிக்காவில் மோசமான அளவை எட்டியுள்ளது. அந்த வெறுப்புணர்வாளர்கள் எந்த அளவுக்கு கொடூரமாக மாறுகிறார்கள் என்பதை கண்கூடாகப் பார்க்கத் தொடங்கிவிட்டோம். எந்த சமூகத்துக்கு எதிரான வெறுப்புணர்வையும் அமெரிக்கா ஏற்றுக் கொள்ளாது' என்று கூறியுள்ளார்.

அமெரிக்கஎம்.பி.க்கள் சுஹாஸ் சுப்பிரமணியம், கிரேஸ் மெங், ஜூடி சூ உள்ளிட்டோர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், 'அமெரிக்காவில் வெள்ளை இன ஆதிக்க உணர்வு எந்த அளவுக்கு மோசமான நிலைக்கு சமூகத்தைக் கொண்டு செல்கிறது என்பது மிகவும் கவலையளிக்கிறது. அமெரிக்காவில் இதுபோன்ற வன்முறைகளுக்கு இடமில்லை. அமெரிக்கர்கள் அனைவருக்கும் சுதந்திரமான வழிபாட்டு உரிமை உண்டு. இதில் எவ்வித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தக் கூடாது' என்று கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் சமூக ஊடகங்களில் தெற்காசிய மக்களுக்கு எதிரான வெறுப்புணர்வு பிரசாரம் கடந்த 2 ஆண்டுகளில் 240 மடங்கு அதிகரித்துள்ளது. சில பிரபலங்களும் வெறுப்புணர்வு செயல்களில் ஈடுபடுவதும் இதற்கு காரணமாக உள்ளது.

வங்கதேசம் போன்ற ஆட்சி மாற்றத்தை காங்கிரஸ் விரும்புகிறது

ராஜ்நாத் குற்றச்சாட்டு

லக்னெளவில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்.

லக்னெள, அக். 16: வங்கதேசத்தில் வன்முறை மூலம் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றம்போல இந்தியாவிலும் நிகழ வேண்டும் என்று காங்கிரஸ், அதன் கூட்டணிக் கட்சிகள் விரும்புகின்றன என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் குற்றஞ்சாட்டினார்.

அராஜகத்தைப் பரப்ப நாட்டின் இளைஞர் சக்தியை தவறாகப் பயன்படுத்த அவர் முயலுகிறார்கள் என்றும் விமர்சித்தார்.

லக்னெளவில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த ராஜ்நாத் சிங் மேலும் கூறியதாவது: ஜனநாயகம் என்பது குழப்பத்தை ஏற்படுத்துவதற்கோ, அரசியல் சட்ட அமைப்புகளின் நம்பகத்தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதற்காகவோ வழங்கப்பட்ட உரிமம் அல்ல. கலகத்தைத் துண்டி நாட்டின் வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிப்பது மிகவும் மோசமான செயல்.

காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தங்கள் துணை அமைப்புகள் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் மோதல்களைத் தூண்டவும் அராஜகத்தைப் பரப்பவும் முயற்சிக்கின்றன. முக்கியமாக நாட்டின் இளைஞர்களை தங்கள் அராஜக அரசியலில் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றன. வங்கதேசத்தில் நடைபெற்றதைப் போன்ற வன்முறை வழியில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த காங்கிரஸ், அதன் கூட்டணிக் கட்சிகள் முயலுகின்றன. ஆட்சி மாற்றத்துக்காக வங்கதேசத்திடமிருந்து உத்வேகம் பெற்றதாக அவர்கள் செய்தியாளர் சந்திப்புகளில் வெளிப்படையாகக் கூறுகின்றனர். அரசைக் கவிழ்க்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இதன்மூலம், ஜனநாயக அமைப்புகளைச் சீர்குலைத்து நாட்டை பற்றி எரியச் செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய ஒரே நோக்கம் என்பது தெளிவாகிறது.

சுதந்திரப் போராட்ட காலத்தில் மகாத்மா காந்தி, செளரி செளராவில் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் முழுவதையும் நிறுத்தினார். ஆனால், காந்தியின் அரசியல் வாரிசு என்று கூறிக்கொள்ளும் காங்கிரஸ், தேர்தல் தோல்விகளுக்குப் பழிவாங்கும் நோக்கில் வன்முறை மற்றும் அராஜகத்தின் மூலம் ஆட்சியைக் கவிழ்க்க முயல்கிறது. காங்கிரஸின் தார்மிக நெறிகள் எந்த அளவுக்குச் சீரழிந்துள்ளன என்பதற்கான உதாரணம் இதுவாகும்.

கடந்த பல தேர்தல்களாகவே மத்தியில் காங்கிரஸ் கட்சியால் தனிப்பெரும்பான்மையைப் பெற முடியாத நிலைதான் உள்ளது. உத்தர பிரதேசத்தில்கூட காங்கிரஸ் கடைசியாக 1985-இல் ஆட்சி அமைத்தது.

1984-க்குப் பிறகு, மத்தியில் காங்கிரஸ் கட்சிக்குத் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. அப்போது பாஜக இரு எம்.பி.க்களை கொண்ட கட்சியாகவே இருந்தது. அப்போது வாக்குத் திருட்டு நடைபெற்றதா? அல்லது மக்களுக்கு உரிய சேவையை ஆற்றாத காரணத்தால் காங்கிரஸ் கரைந்து போனதா? என்பதற்கு ராகுல் காந்தி பதிலளிக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியல்கள் தொடர்பாக புகார் கூறும் காங்கிரஸ் ஒரு முறையான மேல்முறையீட்டு மனுவைக்கூட தாக்கல் செய்யவில்லை. குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அந்தக் கட்சியிடம் ஆதாரங்கள் இல்லை. பாஜக ஒருபோதும் அரசியல் சட்ட அமைப்புகளையோ, நாட்டின் தேர்தல் முறையையோ கேள்விக்குள்ளாக்கியதில்லை.

இந்த அமைப்புகளின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மக்களைத் தவறாக வழிநடத்த காங்கிரஸ் முயற்சிக்கிறது என்றார்.

இந்தியர்கள் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்

அமெரிக்காவுக்கு வலியுறுத்தல்

புது தில்லி, அக்.16: இந்தியர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டுமென அமெரிக்காவுக்கு இந்தியா வெள்ளிக்கிழமை வலியுறுத்தியது.

முன்னதாக அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாகாணம் அரோரா கிராமத்தில் ஹிந்து கோயிலில் துப்பாக்கிச்சூடு நடத்தி அதிக எண்ணிக்கையில் ஹிந்துக்களை கொலை செய்ய சதித்திட்டமிட்ட இளைஞர் ஒருவர் அந்நாட்டு காவல் துறையால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட நிலையில், இந்தியா இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

தில்லியில் நடைபெற்ற வாராந்திர செய்தியாளர்கள் சந்திப்பின்போது இந்தியா-அமெரிக்கா தொடர்பான விவகாரங்கள் குறித்து வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது: ஹிந்து கோயிலில் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்ட சம்பவம் மிகுந்த வருத்தமளிக்கிறது. அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய அந்நாட்டு அரசுக்கு இந்தியா வலியுறுத்துகிறது.

இந்திய-அமெரிக்க வெளியுறவு அமைச்சர்கள் அக்.20-இல் சந்திப்பு: உஸ்பெகிஸ்தான் பயணத்தை நிறைவு செய்துவிட்டு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ சனிக்கிழமை (அக்.17) மும்பை வரவுள்ளார். அதைத்தொடர்ந்து ஜாம்நகருக்கு செல்லும் அவர் அக்டோபர் 22-ஆம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்நிலையில், மார்கோ ரூபியோவுடன் அக்டோபர் 20-ஆம் தேதி இந்தியா-அமெரிக்கா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் முன்னெடுப்புகள் குறித்து வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தவுள்ளார். அன்றைய தினம் அமெரிக்காவின் 250-ஆவது சுதந்திர தின நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

இதனிடையே இரு நாள் சுற்றுப்பயணமாக இந்தியாவுக்கு அக்.19-ஆம் தேதி வருகை புரியும் ஐக்கிய அரபு அமீரக துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் அப்துல்லா பின் சையத் அல் நஹ்யானை மும்பையில் ஜெய்சங்கர் வரவேற்கிறார் என்றார்.

உடனடிச் செய்திகள்
சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

Reform
ARC LIMITED
(முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது)

2 வது தளம், ICC சேம்பர்-II, சாகி விஹார் சாலை, MTNL
அலுவலகம் அருகில், போவாய், மும்பை, மஹாராஷ்ட்ரா - 400 072
தொலைபேசி: +91 22 6895 9000

ஜாமீன் சொத்துக்கள் மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

"LVB RARC 038 TRUST" ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் **ரிஃபார்ம் ARC லிமிடெட்** (முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது) "RARC" என அழைக்கப்படும் நிறுவனம் - **லஷ்மி விலாஸ் வங்கியால்** செயலுறுத்தப்பட்ட 31.03.2017 தேதிய பணியமர்த்தல் ஒப்பந்தத்தின் படி, இதன் கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்களின் ஜாமீன் பெற்ற கடனளித்தவரும் பணியமர்த்தப்பட்ட நிறுவனமுமாகும். இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, பொதுமக்களுக்கு இதன் மூலம் வழங்கும் அறிவிப்பு யாதெனில், இதன் கீழ்க்குறிப்பிட்ட சொத்து "ஆன்லைன் மின்னணு ஏலம்" மூலம் நிலுவைகளை வசூலிப்பதற்காக விற்பனை செய்யப்படுகிறது. சொத்துக்கள் கட்டாயமாக, இதன் கீழ்க்குறிப்பிட்ட இதர நிபந்தனைகள் நீங்கலாக, **"இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "எந்த உதவியையும் நாடாதவாறு"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் பெயர் 1. M/s. சரோம, சரோம பில்டிங், உரிமையாளர் திரு சந்தோஷ் குமார், எண். 1, சிவபுரம், சின்னாண்டிபாளையம் பிரிவு, மங்கலம் சாலை, திருப்பூர் - 641 687 **2. திரு சந்தோஷ் குமார்,** த/பெ சுரேஷ், எண். 1, சிவபுரம், சின்னாண்டிபாளையம் பிரிவு, மங்கலம் சாலை, திருப்பூர் - 641 687 **3. Ms. ஜாக்குலின் ஜூலியட் கவிதா,** த/பெ திரு. N ஜெயபால், குடியிருப்பு முகவரி - கதவு எண். 1/244, ரங்கம்மாள் காலனி, N G G O காலனி அஞ்சல், கோயமுத்தூர் - 600 022 **4. திருமதி S K லதா,** க/பெ சந்தோஷ் குமார், குடியிருப்பு : சரோம பில்டிங், எண். 1, சிவபுரம், சின்னாண்டிபாளையம் பிரிவு, L & T தண்ணீர் தொட்டி பின்புறம், மங்கலம் சாலை, திருப்பூர் - 641 687

15.10.2026 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை : ரூ. 9,73,12,962.76/- **(ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டு மற்றும் பைசா எழுபத்து ஆறு மட்டும்) சொத்து ரிஃபார்ம் ARC லிமிடெட் - ன் கள சுவாதீனத்தில் உள்ளது**

சொத்துக்களின் விபரம்: இனம் எண். 1 - கோயமுத்தூர் பதிவு மாவட்டம், அவினாசி சார்பதிவு மாவட்டம், அவினாசி தாலுக்கா, புதுப்பாளையம் கிராமம், சர்வே எண்கள். 747, 748, 749 மற்றும் 754 ல் அமையப்பெற்ற மொத்த பரப்பு ஏக்கர் 13.52 சென்ட் பரப்பில் லே அவுட்டாக உருவாக்கப்பட்டு "ஸ்ரீவாரி கார்டன்" என பெயரிடப்பட்டதில் உள்ள சைட் எண். 45., **இதன் நான்கெல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு** - 25 அடி அகல கிழமேல் சாலை, **தெற்கு** - சைட் எண். 40, **கிழக்கு** - 30 அடி அகல தென்வடல் சாலை, **மேற்கு** - சைட் எண். 44., **இதன் மத்தியில் உள்ள சொத்தின் அளவீடுகளாவன** - கிழமேல் இருபுறமும் 40 அடி., தென்வடல் இருபுறமும் 50 அடி., என மொத்தம் 2000 சதுர அடி அல்லது 185.87 சதுர மீட்டர் இடம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய லே அவுட் சாலைகளில் உள்ள பாதை உரிமை மற்றும் அனைத்து இதர உடைமைகள். **இனம் எண். 2** - கோயமுத்தூர் பதிவு மாவட்டம், அவினாசி சார்பதிவு மாவட்டம், அவினாசி தாலுக்கா, புதுப்பாளையம் கிராமம், சர்வே எண்கள். 747, 748, 749 மற்றும் 754 ல் அமையப்பெற்ற மொத்த பரப்பு ஏக்கர் 13.52 சென்ட் பரப்பில் லே அவுட்டாக உருவாக்கப்பட்டு "ஸ்ரீவாரி கார்டன்" என பெயரிடப்பட்டதில் உள்ள சைட் எண். 44., இதன் **நான்கெல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு** - 25 அடி அகல கிழமேல் சாலை, **தெற்கு** - சைட் எண். 41, **கிழக்கு** - சைட் எண். 45, **மேற்கு** - சைட் எண். 43., **இதன் மத்தியில் உள்ள சொத்தின் அளவீடுகளாவன கிழக்கு** - கிழமேல் இருபுறமும் 30 அடி., **வடக்கு** தென்வடல் இருபுறமும் 50 அடி., என மொத்தம் 1500 சதுர அடி இடம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய லே அவுட் சாலைகளில் உள்ள பாதை உரிமை மற்றும் அனைத்து இதர உடைமைகள். **இரண்டு சொத்துக்களும் சர்வே எண். 747/1A1 ல் அமைந்துள்ளது.**

i). அடிப்படை விலை - ரூ. 75,54,000/- (ரூபாய். எழுபத்து ஐந்து இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்)
ii). டேவணித்தொகை - ரூ. 7,55,400/- (ரூபாய் எழு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நானூறு மட்டும்)
இச்சொத்து ரிஃபார்ம் ARC லிமிடெட் ன் இயற்சுவாதீனத்தில் உள்ளது.

ஏல நிகழ்வு விபரங்கள்
சொத்து ஆய்வு தேதி : 30.10.2026 காலை 11.00 மணி முதல் 01.00 மணி வரை
விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி : 11.11.2026 மாலை 05.00 மணிக்கு முன்பு
மின்னணு ஏல தேதி : 12.11.2026 பிற்பகல் 03.00 முதல் 04.00 மணி வரை (ஒவ்வொரு முறையும் 5 நிமிடம் என்ற நேர நீட்டிப்புடன்)

மின்னணு ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன
1). சொத்து அடிப்படை விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது., விற்பனையானது ஜாமீன் பெற்ற கடனளித்த ரிஃபார்ம் ARC லிமிடெட் (முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது) ன் உறுதிப்படுத்தலுக்கு கட்டுப்பட்டது. சொத்துக்கள் **"இருக்கின்ற இடத்தில்" மற்றும் "இருக்கின்ற நிலையில்" மற்றும் "எந்த உதவியையும் நாடாதவாறு"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2). மின்னணு ஏலமானது ரிஃபார்ம் ARC லிமிடெட் (முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது) ன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரர் **M/s. ARCA EMART PRIVATE LIMITED** மூலம் வலைதளம் : https://www.Auctionbazaar.com ல் நடத்தப்படும். ஆன்லைன் மின்னணு ஏல விலைகோரல் படிவம் மற்றும் அதனுடன் கூடிய மின்னணு ஏல விற்பனைக்கான பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளடங்கிய மின்னணு ஏலம் விலைப்புள்ளி ஆவண வலைதளங்கள் : **www.rarc.co.in** மற்றும் **https://www.auctionbazaar.com** ல் கிடைக்கப்பெறலாம்.
3). பங்கேற்புக்கான அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை, மின்னணு ஏல முகமை அவர்கள் மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே தகவலளிப்பதால், விருப்பமுள்ள ஏலதாரர்கள் மதிப்புரு மின்னஞ்சல் முகவரியை வைத்திருக்க வேண்டும்.
4). விருப்பமுள்ள ஏலதாரர்கள் செலுத்தப்பட்ட டேவணித்தொகை மற்றும் சுய கையொப்பமிட்ட KYC ஆவணங்களுடனான (நிரந்தர கணக்கு எண் மற்றும் ஆதார் அட்டை போன்றவை) தங்களது விலைப்புள்ளிகள் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்., மேலும் அதனை **ரிஃபார்ம் ARC லிமிடெட்** (முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது) ன் அதிகாரப்பூர்வ அலுவலர், **6 வது தளம், கிஸ்ராஜ் காம்ப்ளக்ஸ் II, எண். 477-482, அண்ணா சாலை, நந்தனம், சென்னை - 600 035** என்ற முகவரியிலும், மின்னஞ்சல் [illegible] ல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விலைப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி தேதி 11.11.2026. தாமதமாக பெறப்படும் அல்லது டேவணித்தொகையற்ற விலைப்புள்ளி படிவங்கள் நிராகரிக்கப்படும்.
5). அனைத்து ஏலதாரர்களும் திவால் மற்றும் நொடிப்புநிலை **சட்டம் 2016 ன் பிரிவு 29A க்கு கட்டுப்பட்டவர்களாவர்.**
6). இன்டர்நெட் / நெட்வொர்க் இடர்பாடு, மின் தடை அல்லது தொழில்நுட்ப கோளாறுகள் தொடர்பாக ஏலதாரர் தரப்பில் ஏதேனும் குறையோ / தவறோ ஏற்பட்டால், அதற்கு ரிஃபார்ம் ARC லிமிடெட் அல்லது சேவைதாரர் பொறுப்பல்ல. ஏலதாரர்கள் தேவையான அனைத்து ஏற்பாடுகளை செய்து வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7). டேவணித்தொகை (EMD) யை, RTGS / NEFT / Fund Transfer மூலம் நடப்பு **கணக்கு எண் : 040211010000004, வங்கியின் பெயர் : யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, கிளை : மும்பை பயனாளி பெயர் : "Reform ARC Limited" IFSC Code: UBIN0590070** க்கு செலுத்தப்பட வேண்டும். டேவணித்தொகைக்கு காசோலை / கேட்பு வரைவோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
8). மீதி விற்பனைத்தொகையை **நடப்பு கணக்கு எண் : 017536000001183, வங்கி பெயர் : DBS பேங்க் இந்தியா லிமிடெட்., கிளை : மட்டுங்கா, பயனாளி பெயர் : Reliance ARC LVB RARC 038 Trust, IFSC Code : DBSS0IN0175** என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும். டேவணித்தொகைக்கான காசோலை / கேட்பு வரைவோலை போன்றவற்றை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதை தயவு கூர்ந்து அறியவும்.
9). அடிப்படை விலைக்கு குறைவான விலைப்புள்ளிகள் மற்றும் / அல்லது டேவணித்தொகையற்ற விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலதாரர்கள் தங்களது விலைப்புள்ளிகளை ஒவ்வொரு கட்டுக்கும் **ரூ. 1,00,000/- (ரூபாய். ஒரு இலட்சம் மட்டும்)** என்ற மடங்கில் அதிகரிக்கலாம். மொத்த ஏலதாரராக இருப்பின், ஏலதாரர் அவரது விலைப்புள்ளியை குறைந்தபட்சம் ஒரு விலை அதிகரிப்பு மடங்கில் அதிகரிக்க வேண்டும்.
10). வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையில் / விற்பனை விலையில் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) உடனடியாக வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்பட்டவுடன் செலுத்த வேண்டும். வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகை / விற்பனை விலையின் மீதி 75% தொகையை வெற்றி பெற்ற ஏலதாரராக அறிவிக்கப்பதிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
11). வெற்றி பெற்ற ஏலதாரர் விற்பனை தொகையை மேற்சொன்னவாறு செலுத்த தவறும் பட்சத்தில், டேவணித்தொகை உட்பட செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளும் எந்த அறிவிப்புமின்றி அபராதமாக கருதி கைப்பற்றிக்கொள்ளப்படும். அதிகாரப்பூர்வ அலுவலரின் முழு அதிகார வரம்புக்குட்பட்டு கால நீட்டிப்பு அனுமதிக்கப்படலாம்.
12). வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை வட்டியின்றி, மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்ற பிறகு திருப்பி தரப்படும்.
13). அதிகாரப்பூர்வ அலுவலரால் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும், அவரது சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்கும் உரியதாகும். இதில் ஏதேனும் பிழையோ தவறான கூற்றோ அல்லது தவிர்த்தலோ இருப்பின் அதற்கு அதிகாரப்பூர்வ அலுவலர் பொறுப்பல்ல.
14). கீழ்கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த விலைப்புள்ளியையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது எந்த முன்னறிவிப்போ அல்லது காரணமோ கூறாமல் விற்பனையை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்ய அல்லது விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.
15). ஏலதாரர், தமது விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன்பே, சொத்து மீதான கடன் பொறுப்புகள் / வில்லங்கங்கள் தொடர்பாக சுயமாக விசாரித்து சொத்தினை பார்வையிட்டு, சொத்தின் தன்மை போன்றவற்றை பொறுத்த மட்டில் தம்மளவில் திருப்தி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எந்த கோரிக்கையும் பிறகு அனுமதிக்கப்பட மாட்டாது.
16). ஏதேனும் சட்டரீதியிலான வரி, கட்டணங்கள் நிலுவை அல்லது சொத்து விற்பனை மீதான முத்திரை தீர்வை / பதிவு கட்டணம் போன்றவற்றை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
17). மேலும் விபரங்களுக்கு, **திரு சதீஷ் குமார் P, அசோசியேட் வைஸ் ப்ரசிடென்ட் - சட்டம், அவர்களை அலைபேசி எண். 89396 77550 மற்றும் திரு ஜான்சன் சாம் பிரகாஷ், துணை மேலாளர் - சட்டம், அலைபேசி எண். 85265 26363 ல் தொடர்பு கொள்ளவும்.**
18). வெற்றி பெற்ற ஏலதாரர் பெயரில் மட்டுமே விற்பனை சான்று வழங்கப்படும். எந்த சூழலிலும், பெயர்(களில்) கூட்ட, கழிக்க, பதிலீடு செய்ய அல்லது மாற்றம் செய்யக்கோரும் எந்த வேண்டுகோளும் அனுமதிக்கப்பட மாட்டாது. மொத்த விற்பனை தொகையும் பெறப்பட்டு, ஜாமீன் பெற்ற கடனளித்தவரால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பிறகே விற்பனை சான்று வழங்கப்படும்.

இவ்வறிவிப்பு கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர் ஆகியோருக்கு சர்ஃபாசி சட்டம் மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் கீழ் சட்டரீதியாக வழங்கப்படும் 15 நாட்கள் அறிவிப்பு தேவையை பூர்த்தி செய்வதற்காகவுமாகும்.

இடம் : கோயமுத்தூர்
தேதி : 17.10.2026
ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர் ARC லிமிடெட்
(முன்பு "ரிலையன்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்" என அறியப்பட்டது)

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : கிராஸ்கட் ரோடு கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.கெம் கன்ட்ரோல்ஸ், 168 C, M A, பெரிய சுப்பண்ண கவுண்டர் வீதி, K.K.புதூர், கோயம்புத்தூர் 641038. **திரு.ஜாஹிர் உசைன்,** கதவு எண்.3B, சாய் ஐஸ்வர்யா அப்பார்ட்மெண்ட், சுப்பையா லேஅவுட், K.K.புதூர், கோயம்புத்தூர் - 641038. **திரு.I.முகம்மது ரஃபி,** 168 C, M A, பெரிய சுப்பண்ண கவுண்டர் வீதி, K.K.புதூர், கோயம்புத்தூர் 641038. **கடன் நிலுவைத் தொகை : 14.10.2026 வரையில் ரூ.39,51,219.00 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 23.07.2025. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 22.09.2025. சொத்து விபரம் :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு தாலுக்கா, சங்கனூர் கிராமம், குப்பகோணாம்பாளையம், பெரிய சுப்பண்ண கவுண்டர் 3வது வீதி, கதவு எண்.168/C, SF No.276/2-ல் உள்ள 1460 சதுரடி அல்லது 3 செண்ட் 153 சதுரடி அளவுள்ள குடியிருப்பு சொத்து. சொத்தின் எல்லைகள் : சைட் எண்.8ல் உள்ள திரு.ஜாகிர் உசைன் அவர்களின் தெற்குப் பகுதி பாகத்திற்கு வடக்கு, மைனர் மருதாச்சலம் அவர்களின் சொத்தில் அமைந்துள்ள பொது சாலைக்கு தெற்கு, சைட் எண்.7க்கு கிழக்கு மற்றும் சைட் எண்.9க்கு மேற்கு. **சொத்துக்கள் திரு.ஜாஹிர் உசைன் மற்றும் திரு.I.முகம்மது ரஃபி ஆகியோருக்கு சொந்தமானதாகும். காப்பு விலை : ரூ.1,26,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.12,60,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 03.11.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 26.10.2026 முதல் 30.10.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 03.11.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் மொபைல் எண்.8489903061, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **03.11.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிராஸ்கட் ரோடு கிளை, முதன்மை மேலாளர் Mob No : 8489903061, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 14.10.2026
இடம் : கோயம்புத்தூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா